# வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
## WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE
Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145


# ஆண்டு 4 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 19.05.2018 (1.00 pm)**

---

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

எமது தாய் மொழி தமிழ். நாம் பேசும்பொழுது தமிழையே முதல் மொழியாகக்கொண்டு பேச வோண்டும். நாம் புலம் பெயர்ந்து எந்த நாட்டில் வாழ்ந்தாலும், எத்தனை மொழிகளைக் கற்றாலும், நாம் முதலில் பேசும் மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும்.

தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய மொழி என்று வரலாறு கூறுகின்றது. ஒருவர் எந்த இனம் என்று அடையாளம் காண்பதற்கு அவர் பேசும் மொழியே அடிப்படையாக அமைகின்றது.

அண்மைக் காலத்தில் தமிழ்மொழி அழிந்துவிடும் அபாயம் தோன்றியுள்ளது. ஆகவே நாம் நமது மொழியை அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டும். வீட்டில் தமிழில் பேசுவதுடன், தமிழ்ப் பாடசாலையிலும் தமிழைக் கற்க வேண்டும்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்ற பாரதியின் வரிகளை நினைவிற்கொண்டு விடை பெறுகின்றேன்.

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.